m University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதல் கலைமாணித் தேர்வு பகுதி – I 1999/2000 (வெளிவாரி)
## (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## EDU 201 பிள்ளை விருத்தியையும் கற்றலையும் விளக்குதல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. "ஒரு பிள்ளையின் விருத்தியில் சூழலும் பரம்பரையும் செல்வாக்கு செலுத்துகின்றன." உளவியலாளர்களின் கருத்துக்களை எடுத்துக்கூறி இக்கூற்றை ஆராய்க.

02. கற்றல் பற்றிய கெஸ்டால்ற் உளவியலாளர்களின் கோட்பாடுகளில் வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் பயன்பாட்டை விளக்கமாக மதிப்பீடு செய்க.

03. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு தருக.
    (அ) மக்கேலின் ஊக்கல் பற்றிய கொள்கை
    (ஆ) மாஸ்லோவின் தேவைக் கொள்கை
    (இ) சிக்மன்ட் புரொய்ட்டின் உளப்பகுப்பாய்வுக் கொள்கை

04. (அ) வகுப்பறையில் கற்கும் மாணவர்களின் ஞாபகத் திறனை மேம்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் வழிவகைகளை விளக்குக.
    (ஆ) குழந்தைப் பருவத்தில் ஏற்படும் "மொழி வளர்ச்சி" படி நிலைகளைச் சுருக்கமாக விளக்குக.

05. (அ) புலக்காட்சி என்றால் என்ன? இதை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள் இரண்டினைத் தருக.
    (ஆ) தூல சிந்தனைப் பருவத்தில் பிள்ளையின் அறிவு வளர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தை விளக்குக.
    (இ) "கற்றல் இடமாற்றம்" பற்றிய கொள்கைகளில் வகுப்பறைப் பயன்பாடு பற்றிச் சுருக்கமாக விளக்குக.

06. (அ) கல்வியியலாளர்கள் கூறிய சிந்தனை வளர்ச்சியின் மூன்று கட்டங்களைத் தருக.
    (ஆ) "மொழி மூலம் சிந்தனை செய்தல்" என்றால் என்ன?
    (இ) "கோல்டன்" என்பவர் ஆக்கபூர்வமான சிந்தனை பற்றிக் கூறிய கருத்தைச் சுருக்கமாகத் தருக.

07. (அ) கற்றல் இடமாற்றம் என்றால் என்ன?
(ஆ) கற்றல் இடமாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?
(இ) கற்றல் இடமாற்றம் மாணவர் மத்தியில் இடம்பெறச் செய்வதிலேயே ஆசிரியரின் கற்பித்தல் பணியின் சிறப்பியல்பு அடங்கியுள்ளது. எனவே இங்கு ஆசிரியர் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுக.

08. கட்டிளமைப் பருவ இயல்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, இப்பருவத்தினர் சிறந்த மனோநிலையுடன் வாழ்வதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி ஓர் ஆசிரியர் எத்தகைய நடவடிக்கைகளை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளலாம் என்பதை விளக்குக.

*******